www.Padasalai.Net www.TrbTnpsc.com

மதுரை மாவட்டம் தேதி: 18-12-23

HMD

# அரையாண்டுத் தேர்வு – 2023

**11** - ஆம் வகுப்பு

## வணிகவியல்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பிரிவு – I (20x1=20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

1. இடத் தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
   அ. போக்குவரத்து ஆ. பண்டகசாலை இ. விற்பனையாளர் ஈ. காப்பீடு
2. மருத்துவர் தொழில் என்பது ________________
   அ. வேலைவாய்ப்பு ஆ. தொழில் இ. சிறப்புத் தொழில் ஈ. தனியார் வணிகம்
3. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
   அ.தனியாள் வணிகம் ஆ.கூட்டாண்மை இ. கூட்டுறவுச் சங்கம் ஈ.நிறுமம்
4. இந்து கூட்டுக் குடும்பத் தொழில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?
   அ. கர்த்தா ஆ. கூட்டு வாரிசுதாரர் இ. தலைமுறைகள் ஈ. கூட்டாளிகள்
5. ஒரு செல்லத்தகு ஒப்பந்த நிறைவேற்றத்தில் ஒப்பந்த நபரின் கடமை
   அ) ஒப்பந்தம் விடுவிப்பு செய்யப்பட்டது ஆ) நடைமுறைப்படுத்தப்படும்
   இ) செல்லாதது ஈ) இவை எதுவும் இல்லை
6. பின்வரும் நபர்களில் யாரால் ஒப்பந்தம் நிறைவேற்ற முடியும்?
   அ) வாக்குறுதி வழங்குபவர் மட்டும் ஆ) வாக்குறுதி வழங்குபவரின் சட்ட பிரதிநிதிகள்
   இ)வாக்குறுதி வழங்குபவரின் முகவர் ஈ)இவை அனைத்தும்
7. நிறுமச் சட்டத்தின் அட்டவணை – அ (Table – A) என்பது
   அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ. இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
   இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
8. நுகர்வோர் கூட்டுறவு ________________ முதன் முதலாக வெற்றி பெற்றது
   அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா
9. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது
   அ) அனுப்புகை இரசீது ஆ) கப்பல் இரசீது
   இ) கப்பல் துணைத்தலைவர் இரசீது ஈ) வணிகத்தூதுவர்
10. பொதுத் துறை நிறுவனத்தின் மிகப்பழமையான அமைப்பு
    அ) பொதுத்துறை நிறுவனம் ஆ) துறைவாரி அமைப்பு
    இ) பன்னாட்டு நிறுவனம் ஈ) சட்டமுறை நிறுவனம்
11. சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ________ எனப்படும்.
    அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) பன்னாட்டு வியாபாரம்
12. உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் ________
    அ) உற்பத்தியாளர் ஆ) மொத்த வியாபாரி இ) சில்லறை வியாபாரி ஈ) நுகர்வோர்கள்
13. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ________ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
    அ) ஆவணம் ஆ) தனியார் இ) குளிர் பதன ஈ) கூட்டுறவு
14. இந்தியாவின் மிகப் பெரிய வணிக வங்கி
    (அ) ஐசிஐசிஐ (ஆ) எஸ்.பி.ஐ (இ) பிஎன்பி (ஈ) ஆர்.பி.ஐ
15. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
    அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008
16. பொருத்துக:
    1) இடத் தடை - i) போக்குவரத்து
    2) காலத் தடை - ii) பண்டகசாலை
    3) இடர்பாட்டுத் தடை - iii) காப்பீடு
    4) அறிவுசார் தடை - iv) விளம்பரம்

| | 1 | 2 | 3 | 4 | | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | I | ii | iii | iv | ஆ) | ii | iii | iv | i |
| இ) | iv | iii | I | ii | ஈ) | iii | I | ii | iv |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

17. கூற்று (I): சரக்கு மற்றும் சேவை வரி என்பது மறைமுக வரியாகும்
கூற்று (II): ஐந்து தலைப்புகளின் கீழ் வரும் வருமானத்தின் கூடுதல் என்பது மொத்த வருமானமாகும்.
அ) இரண்டு கூற்றும் சரி ஆ) இரண்டு கூற்றும் தவறு
இ) கூற்று (I) சரி ஆனால் கூற்று (II) தவறு ஈ) கூற்று (I) தவறு ஆனால் கூற்று (II) சரி
18. பொருந்தாத ஒன்றை கண்டறிக.
அ) கடல்சார் காப்பீடு ஆ) ஆயுள் காப்பீடு இ) மருத்துவக் காப்பீடு ஈ) தீ காப்பீடு
19. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை வழங்குகிறது.
அ) அதிக விலை ஆ) குறைந்த விலை இ) நியாயமான விலை ஈ) மிதமான விலை
20. ____________ என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.
அ) அரசு பத்திரங்கள் ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்
இ) பெருநிறுவன பத்திரங்கள் ஈ) முதலீட்டு பத்திரங்கள்

## பிரிவு – II (7x2=14)

குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண். 30 க்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

21. நாளங்காடி என்றால் என்ன?
22. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?
23. சிறப்புத் தொழில் என்றால் என்ன?
24. வருமான வரி என்றால் என்ன?
25. மரபுசார் உற்பத்தித் தொழில் என்றால் என்ன?
26. கர்த்தா என்பவர் யார்?
27. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
28. இளவர் கூட்டாளி என்பவர் யார்?
29. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்களை தருக.
30. ________ ஏற்றுமதியாளருக்கு பொருட்களின் வகை, விலை, தரம், கட்டும முறை போன்றவற்றை தேர்வு செய்ய முழு சுதந்திரம் அளிக்கிறது.

## பிரிவு – III (7x3=21)

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண். 40 க்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

31. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32. நேரடி வரிக்கும் மறைமுக வரிக்கும் உள்ள மூன்று வேறுபாடுகளை எழுதுக.
33. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
34. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
35. ஒப்பந்த நிறைவேற்றம் என்றால் என்ன?
36. உடன்படிக்கை என்றால் என்ன?
37. அரசு நிறுமம் என்றால் என்ன?
38. மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
39. வழங்கல் வழிகள் குறித்து நீவிர் அறிவது யாது?
40. சித்தாலங்குடி கிராமத்தில் வசிக்கும் சுதா சாரங்கன் தனது கோவிலில் முருகன் சிலை ஒன்றை வைப்பதற்கு சிற்பி ஒருவரை சந்தித்து ரூபாய் 500000 கொடுத்து ஒரு மாத காலத்தில் சிலையை செய்து தருமாறு ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறார். ஒப்பந்தம் செய்த பத்து நாளில் சிற்பி இறந்துவிடுகிறார். இந்த சூழ்நிலையில் சிற்பின் வாரிசு இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றலாமா? விளக்கம் தருக

## பிரிவு – IV (7x5=35)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

41. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. ***(அல்லது)***
தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க.
42. வருமான வரியின் ஐந்து சிறப்புக் கூறுகளை விளக்கி எழுதுக. ***(அல்லது)***
ஒப்பந்த விடுவிப்பு வழிகளை விளக்குக.
43. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை? ***(அல்லது)***
கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?
44. உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்களைச் எழுதுக. ***(அல்லது)***
செலுத்தல் சம நிலைக்கும் வாணிபச் சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக
45. கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. ***(அல்லது)***
பன்னாட்டுத் நிறுமத்தின் நன்மைகளை விவரி.
46. அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? (எதேனும் ஐந்து மட்டும்) ***(அல்லது)***
பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை?
47. சுய உதவிக் குழுக்களின் நோக்கங்கள் யாவை? ***(அல்லது)***
தொழில் நெறிமுறைகளின் பல்வேறு முக்கியக் கூறுகளை விளக்கவும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**+1 வணிகவியல் அரையாண்டுத் தேர்வு டிசம் - 23**

**சரியான விடை**

1. (அ) போக்குவரத்து
2. (இ) சிறப்புத் தொழில்
3. (அ) தனியாள் வணிகம்
4. (ஆ) கூட்டு வாரிசுதாரர்
5. (அ) ஒப்பந்தம் விடுவிப்பு செய்யப்பட்டது
6. (ஈ) இவை அனைத்தும்
7. (இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி
8. (அ) இங்கிலாந்து
9. (ஆ) கப்பல் இரசீது
10. (ஆ) துறைவாரி அமைப்பு
11. (இ) மறு ஏற்றுமதி வியாபாரம்
12. (ஆ) மொத்த வியாபாரி
13. (இ) குளிர்பதன
14. (ஆ) எஸ்.பி.ஜ.
15. (இ) 2006
16. (அ) i ii iii iv v
17. (அ) இரண்டு கூற்றும் சரி
18. (ஆ) ஆயுள் காப்பீடு
19. (இ) நியாயமான விலை
20. (ஆ) அந்நிய செலவாணி மாற்று பத்திரம்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. நாளங்காடி:** பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடம் அங்காடி என அழைக்கப்பட்டது. அப்பொருள்களின் விற்பனை பகலில் நடந்ததை நாளங்காடி என அழைக்கப்பட்டது.

**22. சரக்கு மற்றும் சேவை வரி:** சரக்கு மற்றும் சேவைகள் நகரும் போது விதிக்கப்படும் வரி ஆகும். இது ஒரு சேருமிடம் சார்ந்து நுகர்வு வரி மற்றும் அளிப்பு சங்கிலியின் ஒவ்வொரு படிநிலையிலும் காட்டப்பட்ட மதிப்பின் மீது வசூலிக்கப்படுகிறது.

**23. சிறப்புத் தொழில்:** அந்தந்த துறையால், அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும். **எகா:-** வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.

**24. வருமானவரி:** ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமானவரி எனப்படும். இது ஒரு நேர்முக வரி ஆகும். இவ்வரியில் வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலாது.

**25. மரபுசார் உற்பத்தித் தொழில்:-** நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் வளர்க்கப்படுகின்ற தொழிற்சாலையே மரபுசார் தொழிற்சாலை எனப்படும். எகா:- கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு

**26. கர்த்தா:** இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் குடும்ப தலைமை உறுப்பினர்க்கு "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று பெயர்.

**27. இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை இங்கிலாந்தில் 1844 ஆம் ஆண்டு 28 நெசவாளர் உறுப்பினர்களுடன் "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி" (இராக்டேல் முன்னோடிகள் சங்கம்) என்ற பெயரில் தொடங்கினார்.

**28. இளவர் கூட்டாளி:** இந்திய பெரும்பான்மைச் சட்டம் 18 வயதை பூர்த்தி அடையாத ஒரு நபரை இளவர் என்று குறிப்பிடுகிறது. 18 வயது பூர்த்தி அடைந்தாலும் 21 வயது வரை பாதுகாவலரை துணை கொள்ள வேண்டும்.

**29. பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.** பாட்டா, கோல்கேட் பாமொலிவ், சோனி கார்ப்பரேசன், சுசூகி, டைமெக்ஸ்

**30. வெளிப்படை சரக்கணை** ஏற்றுமதியாளருக்கு பொருட்களின் வகை, விலை, தரம், கட்டும முறை போன்றவற்றை தேர்வு செய்ய முழு சுதந்திரம் அளிக்கிறது

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?**
கொற்கை, சாலியூர், காயல்பட்டிணம், மருகாவூர்பட்டினம், குமரி

**32. நேரடி வரி – மறைமுக வரி ஏதேனும் (3)**

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| **பொருள்** | நேர்முக வரி என்பது, நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது. | மறைமுக வரி என்பது சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது. |
| **இயல்பு** | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| **வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம்** | ஒரு நபரையே சென்றடைகிறது. | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றன. |
| **வகைகள்** | சொத்துவரி, வருமானவரி, நிறும வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி உள்நாட்டு வரி, சுங்க வரி. |
| **ஏய்ப்பு** | வரி வாய்ப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. | வரி ஏய்ப்பு காண வாய்ப்பு குறைவு |
| **பண வீக்கம்** | இது பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது. | இது பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| **மாற்றுதல்** | மாற்ற முடியாது | மாற்ற முடியும். |

**33. சேவைத் தொழில்கள்:** இயல் பொருட்களை உற்பத்தி செய்யாமல், சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்பனை செய்பவை, சேவைத் தொழில்கள் எனப்படுகின்றன. இவ்வகை சேவை



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

வியாபாரம் பலவகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன. எகா:- மருத்துவக் கருவிகள் தயாரிப்பு தொழிற்சாலை, கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில், சுற்றுலாத் தொழில் வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களான வங்கியியல், காப்பீடு, பண்டகச் சாலை ஆகியவை இந்தச் சேவைத் தொழிற்சாலையில் உள்ளடங்கும்.

**34. வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே, அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது.

**35. ஒப்பந்த நிறைவேற்றம்:** ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தமது கடமைகளை நிறைவேற்றி விட்டால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட இரண்டு வழிகள் உள்ளன.

**36. உடன்படிக்கை** 2(e)ன் படி "ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழியின் தொகுதியும்" உடன்படிக்கை ஆகும.

**37. அரசு நிறுமம் என்றால் என்ன?**

பொதுத்துறை நிறுவனங்கள், இந்திய நிறுமச் சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்தால் அது அரசு நிறுமம் எனப்படும். இவ்வகை நிறுமங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசுகளுக்கு சொந்தமானது.

இந்திய நிறுமச் சட்டம் 1956 பிரிவு 617-ன் படி அரசு நிறுமங்கள் என்பது செலுத்தப்பட்ட மூலதனம் 51% க்கு மேலாக மத்திய அரசு மாநில அரசு அல்லது மாநில அரசுகள் பகுதி மத்திய அரசு மற்றும் பகுதி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசுகள் வைத்திருந்தால், அவற்றையே அரசு நிறுமங்கள் என்று அழைக்கப்படும். எகா:- BHEL, IOC

**38. மின்னணு வங்கியியல்:** தற்போது அனைத்து வங்கிகளும் வங்கி பரிவர்த்தனைகான நேரம் மற்றும் செலவைக் குறைத்து, வாடிக்கையாளர்களுக்கு வசதியான வங்கி சேவைகளை இணையம் மூலம் வழங்குகின்றன. வரைவோலைகள், காசோலைகள் மற்றும் காகித அடிப்படையிலான நிதி பரிமாற்றங்களுக்கு இந்தச் சேவை ஒரு மாற்று ஆகும்.

**39. வழங்கல் வழிகள் குறித்து நீவிர் அறிவது**

வழங்கல் வழி என்பது, உற்பத்தி செய்யப்பட்ட பொருள், உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரைச் சென்றடைய உதவும் பாதை ஆகும். இடைநிலையர் இன்றி, பொருட்களை நேரடியாக விநியோகித்தால், அது நேரடி வழங்கல் வழியாகும்.

வழங்கல் வழியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடைநிலையர் விநியோகப் பணிகளைச் செய்தால் மறைமுக வழங்கல் வழியாகும்.

கோடிக்கணக்கான நுகர்வோரைப் பொருட்கள் சென்றடைய இடைநிலையர் உதவுகின்றனர்.

வழங்கல் வழி மூலமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் நுகர்வோரைப் பொருட்கள் சென்றடைகிறது.

40. சிறப்பியின் வாரிசுக்கு **தனிப்பட்ட ஆற்றல் இருந்தால்** நிறைவேற்றலாம்

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.**

**ஆள்சார் தடை:-** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**இடத்தடை:-** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-** ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

**இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:-** பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

**நட்ட இடர்பாட்டுத்தடை:-** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**அறிவுசார் தடை:-** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**பண்டப்பரிமாற்றத் தடை:-** பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**நிதித்தடை:-** உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.

| 41. ஆ. தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|
| **உருவாக்கும் முறை:-** தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள், பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்கு உட்பட்டது. | சிறப்புத் தொழிலமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல் | சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம். |
| **பணியின் தன்மை:-** சரக்கு மற்றும் சேவையை பொது மக்களுக்கு அளித்தல் | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல். |
| **தகுதி:-** குறைந்தபட்ச தகுதி என்று ஏதும் இல்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தகுதியும், பயிற்சியும் பெறுதல். | குறைந்த பட்ச தகுதி தேவை இல்லை. |
| **அடிப்படை நோக்கம்:-** சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து, இலாபம் ஈட்டுவது. | சேவை புரிதல் | முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன், கூலி, சம்பளம் பெறுதல். |
| **வெகுமதி:-** இலாபம் | தொழில் முறை கட்டணம் | கூலி, சம்பளம். |
| **இடர்:-** இலாபம், நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும நிலையானது. | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை. |
| **உரிமை மாற்றம்:-** சில நடைமுறைகளைப் பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும். | உரிமை மாற்றம் செய்ய இயலாது. | உரிமை மாற்றம் செய்ய முடியாது. |

**42.அ. வருமானவரியின் ஐந்து சிறப்புக் கூறுகள்:**

அரசியல் அமைப்பின் படி விதிக்கப்படுகிறது.

மத்திய அரசால் விதிக்கப்படுகிறது.

நேர்முகவரி

ஆண்டு வரி

நபரின் மீது வரி விதிக்கப்படுகிறது.

வருமானத்தின் மீது வரி கணக்கிடப்படுகிறது.

குறிப்பிட்ட வீதத்தில் விதிக்கப்படுகிறது.

முந்தைய ஆண்டின் வருமானம் மதிப்பீட்டு ஆண்டில் மதிப்பிடப்படுகிறது.

மத்திய நேரடி வரிகள் வாரியத்தால் (CBDT) நிர்வகிக்கப்படுகிறது.

இந்தியா முழுவதும் பொருந்தும் தன்மை உடையது.

**42.ஆ. ஒப்பந்த விடுவிப்பு வழிகளை விளக்குக.**

**நிறைவேற்றத்தின் மூலம் விடுவிப்பு:-**

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள், தமது கடமைகளைச் செய்தால், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். வாக்குறுதி அளித்தபடி குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட முறையில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

**வகைகள்:-** உண்மையான நிறைவேற்றம், நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்.

**இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு:-**

உடன்பாட்டின் விளைவாக ஒப்பந்தம் ஏற்படுவது போல, அதில் ஈடுபட்டுள்ள நபர்கள் ஒன்றிணைந்து உடன்பாட்டை ஒரு முடிவுக்கு கொண்டு வரலாம். இரு தரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு, பின்வரும் ஏதேனும் வழிகளில் இருக்கலாம். அவை ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம். இருதரப்பு விடுவிப்பு, பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் செய்யப்படலாம். பரிமாற்றம், திருத்தம், தள்ளுபடி, ரத்து செய்தல், தளர்த்தல், இணைப்பு.

**இயலாது போதலால் விடுவிப்பு:-** ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போனால், அது இயலாது போதலால் விடுவிப்பு எனப்படும்.

வகைகள்:- உடன்படிக்கை ஏற்படும் பொழுதே நிறைவேற்ற இயலாமை, ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை.

**காலம் கடந்து போவதால் விடுவிப்பு:-** வரையறைச் சட்டம் 163-ன் படி ஒப்பந்தம் ஒன்று குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் இருந்தால், அதனால் பாதிக்கப்பட்ட நபர் குறிப்பிட்ட காலத்திற்குள் சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரும் உரிமையை இழந்து விடுகிறார்.

**சட்டத்தினால் விடுவிப்பு:-** சட்டத்தினால் விடுவிப்பு என்பது சட்டத்தின் தலையீட்டினால் ஒப்பந்தம் ஒன்று விடுவிக்கப்படுவதை இது குறிக்கும்.

**இறப்பு:-** தனிப்பட்ட ஆற்றலை நம்பியுள்ள ஒப்பந்தங்களில், வாக்குறுதி அளித்தவர் இறந்தவுடன் அவ்வொப்பந்தம் முடிவுக்கு வந்துவிடும்.

**இணைப்பு:-** ஒரு நபரின் குறைந்தளவு உரிமையானது, அவருக்கு வந்து சேரும் உயர்ந்த அளவு உரிமையுடன் இணைப்பதைக் குறிக்கும்.

**நொடிப்பு நிலை:-** ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர், நொடிப்பு நிலை அடைந்து விட்டால், அவருடைய அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்கப்படுகிறார்.

**முக்கியமான திருத்தம்:-** ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒரு நபர் அடுத்தவரின் அனுமதியின்றி ஒப்பந்தத்தில் நிபந்தனைகளில் திருத்தம் செய்வாரேயெனில், ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

## 43.அ. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?

**தனிநபர் உரிமை:-** இது தனிநபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு:-** தனது அறிவுத் திறன் மற்றும் பட்டறிவு மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

**வரையறாப் பொறுப்பு:-** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை:-** நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.

**அரசு விதிமுறைகள் பின்பற்றாமை:-** இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

**குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை:-** தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் முதல் சிறிய அளிவிலேயே இருக்கும் அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

**43ஆ. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம்** கூட்டாண்மையின் பெயர்
நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை
கூட்டாண்மையின் காலவரையறை
கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை
கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை
இலாப நட்டம் பகிர்வு விகிதம்
மூலதனத்தின் மீது வட்டி
எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம்
கூட்டாளிகள் தரும் கடன்
கணக்கு வைப்பு
கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு

**44.அ. உலக வர்த்தக அமைப்பு நோக்கங்கள்:**
உறுப்பு நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
உறுப்பு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு உலகின் பல்வேறு வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்துதல்.
பன்னாட்டு வணிகத்தில் ஒரு ஒருங்கிணைந்த மேலும் நிறைவேற்றத்தக்க மற்றும் நீடித்த வர்த்தக முறையை ஊக்குவித்தல்.
பன்னாட்டு அளவில் சரக்குகள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தல்.
முழு வேலைவாய்ப்பு மற்றும் நீடித்த நிலையான வருமானம் ஆகியவற்றை உறுதி செய்தல்.
சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.

| 44 ஆ. அடிப்படை | செலுத்தல் சமநிலை | வாணிப சமநிலை |
|---|---|---|
| **பொருள்** | குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டில் குடியிருப்போர்களுக்கும், மற்ற நாடுகளில் குடியிருப்போர் களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான பதிவுகளில் ஒரு அறிக்கையே ஆகும். | ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிக்கும். |
| **நடவடிக்கைகளின் தன்மை** | இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இரண்டையும் பதிவு செய்கிறது. | இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படும். |
| **மூலதன நடவடிக்கைகளில் பதிவு** | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்கிறது. | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை. |
| **நடவடிக்கை உள்ளமைப்பு** | இதில் வாணிபச் சமநிலை, சேவைகள் சமநிலை, ஒரு பக்கமான செலுத்தல் பரிமாற்றம் மற்றும் மூலதன நடவடிக்கைகள் அடங்கும். | செலுத்தல் சமநிலையின் நடப்புக் கணக்கில் ஒரு பகுதி ஆகும். |
| **நிகர விளைவு** | எப்பொழுதும் பெறுதல் மற்றும் செலுத்துதல் சமநிலையில் இருக்கும். | இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும். |
| **பொருளாதார நிலையை காட்டுதல்** | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகிறது. | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதில்லை. |

**45.அ**

| 45. அ. அடிப்படை | கப்பல் ரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|---|
| **பொருள்** | இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணம் ஆகும். | இது சரக்கை அனுப்ப மொத்த கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும். |
| **மாற்றும் தன்மை** | இதை எளிதில் மேல் எழுதுதல் வாயிலாக, மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியும். | இதை மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியாது. |
| **கடன் பெறுதல்** | இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம். | இதை பிணையமாக வைத்து கடன் பெற முடியாது. |
| **குத்தகை** | இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் அல்ல. | இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் ஆகும். |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**45.ஆ. பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகளை குறைந்த பட்ச கூலி:-** குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது.

**தரமான பொருட்கள்:-** வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாராளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும், சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

**வாழ்க்கைத் தரம் உயர்கின்றது:-** பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

**பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்:-** இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும், பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

**நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி:-** இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.

**46.அ. அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் நிறுமச்சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்:-** 1956ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழோ அல்லது முந்தைய நிறுமச் சட்டங்களின் கீழோ பதிவு செய்திருக்க வேண்டும். மைய அரசு நேரடியாக நிறுமச் சட்டத்தின் விதிகளின் கீழ், அரசு நிறுமங்கள் அறிவிப்பு ஆணையை வெளியிடுகின்றன.

**அரசின் நிர்வாக முடிவு:-** பாராளுமன்றமோ அல்லது சட்டசபையின் அங்கீகாரம் இல்லாமலோ அரசு நிறுமத்தை அரசாங்கம் நிர்வாக முடிவின் கீழ் அமைக்கலாம்.

**நீடித்த நிலைத்த தன்மை:-** இது தனித்த சட்ட பூர்வ தன்மையுடைய அமைப்பாகும். தனது சொந்த பெயரால் சொத்துக்களை வாங்கவும் உடன்படிக்கை ஏற்படுத்தவும் முடியும்.

**முழுவதும் அல்லது பெரும்பான்மையான மூலதனத்தை அரசு வழங்குகிறது:-** அரசு நிறுமத்திற்கு தேவையான மூலதனத்தை குறைந்த பட்சம் 51% முழுவதுமோ அல்லது பெரும்பான்மையை அரசே வழங்குகிறது. ஆனால், அதன் வருமானத்தை அரசு கருவூலத்தில் செலுத்துவது இல்லை.

**பெரும்பான்மையான அரசு இயக்குநர்கள்:-** அரசாங்கமே பெரும்பான்மையான மூலதனத்தை வழங்குவதால் இயக்குனர்களை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது.

**46.ஆ. பல்வேறுவகையான பண்டகக் காப்பகங்கள் உரிமையின் அடிப்படையில்:-** இவ்வகை பண்டகசாலைகள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை. இவை அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.

**அரசு பண்டக சாலைகள்:-** அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக, அரசு இந்த பண்டக சாலைகளை உருவாக்கி நடத்தி வருகிறது. இதன் சேவைகள் பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது பெரிய அளவில் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகசாலைகளை சொந்தமாக அமைக்க முடியாது. அவர்கள் இம்மாதிரியான பண்டகசாலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கூட்டுறவு பண்டக சாலைகள்:-** இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.

**பிணையகாப்பு பண்டகசாலைகள்:-** இவ்வகை பண்டகசாலைகள், அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன.

**நிறுவன முறை பண்டகசாலைகள்:-** ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டக சாலைகளை வைத்திருக்கின்றன.

**விநியோக மையப் பண்டகசாலைகள்:-** தற்காலிகமாக சரக்குகளை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வைப்பதற்கும் அங்கிருந்து சரக்குகளை பகிர்ந்தளிக்கவும், இவ்வகை பண்டக சாலைகள் பயன்படுகின்றன.

**பண்டங்களின் அடிப்படையில்:-**

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பொதுப் பண்டக சாலை ஆகும்.

**சிறப்பு பொருள் பண்டகசாலைகள்:-** புகையிலை, பருத்தி, கம்பளி போன்ற குறிப்பிட்ட வகை பொருட்களை பாதுகாப்பதற்காக இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

**குளிர்பதன பண்டகசாலைகள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்:-** பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டக சாலைகளில் சேமிக்கப்படுகின்றன.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி போன்ற விரைவில் அழுகக் கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. சரியான நேரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள், ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகசாலைகள்:-** தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டக காப்பகங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன.

**தானியங்கி பண்டக சாலை:-** ஓரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்ட வசதிகள் இங்கு உண்டு. இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில் நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

## 47.அ. சுய உதவி குழுக்களின் நோக்கங்கள்

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது.

முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்.

பெண்களிடம் திறமையை உருவாக்கி, ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபட செய்வது.

பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களின் மனங்களில், சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்.

பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்.

கடன் வட்டம் அல்லது சுழல் நிதி மற்றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

உறுப்பினர்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்துதல்.

எதிர்காலப் பொருளாதார அதிகார மேலாண்மையை திறமையை வளர்த்தல் மற்றும் கடன் தொடர்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

உறுப்பினர்கள் தங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்கு அவர்களாகவே தீர்வு காண்பதற்கான விழிப்புணர்வு பயிற்சியினை அளித்தல்.

குழு உறுப்பினர்களின் பொதுவான விருப்பங்களை அறிந்து, குழு நடவடிக்கைகளை முடிவு செய்தல், திறமையான மற்றும் சிக்கனமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் அனைத்துச் சமூகப் பொருளாதாரத் தடைகளையும் வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களை தயார்படுத்துதல்.

## 47.ஆ. தொழில் நெறிமுறைகள் பல்வேறு முக்கியக் கூறுகளை விளக்கவும்.

**உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு:-** நன்னெறி விதிகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு தொழிலமைப்பின் அடிப்படைக் கடமையாகும். அப்படி நன்னெறி விதிமுறைகளை உருவாக்குவதில் உயர்மட்ட மேலாண்மையின் தார்மீக ஆதரவு இன்றியமையாதது. தார்மீக நன்னெறி விதிமுறைகளை உருவாக்க ஒவ்வொரு தொழிலமைப்பும் ஒரு குழுவை அமர்த்தி, அதில் அனைத்து ஊழியர்களின் பிரதிநிதிகளும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

**நன்னெறி நடத்தை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்:-** தொழில் அமைப்புகள், நன்னெறி விதிகளை உருவாக்கி, அதை எழுத்து வடிவில் பணிபுரியும் அனைவருக்கும் புரியும்படி தெரிவிக்க வேண்டும். இந்த நன்னெறி விதிகள் தொழில் அமைப்பில் இயங்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே உருவாக்கிட வேண்டும்.

**நன்னெறி விதிமுறைகளை கடைபிடிப்பதைக் கண்காணித்தல்:-** நன்னெறி விதிமுறைகளை, ஒவ்வொரு பிரிவும் அல்லது துறையும் முறையாக கடைப்பிடிக்கின்றனவா என ஆய்வு செய்ய கண்காணிப்பு அவசியம். இதனை நன்னெறி கண்காணிப்பு என்று அழைப்பர்.

**அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்:-** நன்னெறி விதிகளுக்கு, பணியாளர்கள் முழு ஆதரவைத் திரட்ட, நன்னெறி விதிகளை உருவாக்குவதற்கு முன்பாக அதைப்பற்றி சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் பல்வேறு மட்டங்களில் விவாதம் நடத்தி, அவர்களின் எண்ணப் போக்கை அறிந்து, அதற்கு ஏற்றப்படி பணியாளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு குழு மூலம் நன்னெறி விதிகளை உருவாக்கப்பட வேண்டும்.

**நன்னெறி பலனை அளித்தல்:-** நன்னெறி விதிகளினால் விளைந்திட்ட பலனை ஆய்வு செய்ய, நன்னெறி தணிக்கை அவசியம். ஆனால் சில வகை செயல்களை எண் ரீதியாக வெளிப்படுத்துவது கடினம்.

எகா:- ஊழியர்களின் ஆற்றல், ஒழுக்கம், பொருளின் தரம் கவனம் போன்றவைகள். இருப்பினும் அவைகளுக்கும் எண் வடிவம் அளித்து தொழிலமைப்பின் ஒவ்வொரு செயலையும், நன்னெறி விதிகள் என்ற தர அளவுகோல்களைக் கொண்டு அளத்தல் அவசியம்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com